5th September 1960]

intervening at every stage then there will be no devolution of authority, no delegation of powers and everything will have to be done by Government themselves.

Ministers' tour

* 437 *Q.*—Sri M. P. SARATHI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா ?

இந்த ராஜ்ய அமைச்சர்கள் அரசாங்கப் பணியின் காரணமாக சுற்றுப்பயணம் செய்யும்போது கட்சி அலுவல்களையும் சேர்த்து கவனிக்கிறார்களா ? அதற்காக பயணப்படி வாங்குகிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes. Some of the Ministers attend to party work also while on tour without detriment to their official work. Travelling allowance is drawn by Ministers when they go on tour for official purposes. If party work is combined with official tours, no travelling allowance is claimed for the journey and halt involved in such party work. When the purpose of the tour is purely for party work, no travelling allowance is drawn.

Sri S. M. ANNAMALAI : ஸார், இப்படி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து பிரயாணப் படி வாங்கும்போது, சாப்பாடுதான் இனமாகக் கிடைக்கிறதே, அப்படியிருக்கும்போது, சாப்பாட்டுப் பணம் ஏன் அவர்கள் வாங்கிக் கொள்ளவேண்டும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது சாப்பாட்டுப் பணம் இல்லை. சாப்பாட்டுக்காகக் கொடுக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம்.

Sri A. GOVINDASAMY : சட்டசபை நடக்கும்பொழுது, அமைச்சரவர்கள் இப்படி சுற்றுப் பிரயாணம் போகும்போது, சட்ட சபைக் காரியங்கள் சரிவர நடைபெற, இந்தக் காரியங்களைக் கவனிப்பார்களா, அல்லது சுற்றுப்பிரயாணத்தைக் கவனிப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மந்திரிகள் பார்த்து எது முக்கியம் என்று தீர்மானிப்பார்கள் ; சட்ட சபைக் காரியங்கள் தடையில்லாமல் நடைபெறுவதற்கும் பார்த்துக்கொள்வார்கள் ; அதைக் கவனிக்க சபாநாயகராகிய தாங்களும் இருக்கிறீர்கள். எங்களுக்குத் தெரிந்த வரையில், மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்தினால், இங்கே எந்தக் காரியமும் தடையில்லாமல் நடக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

Sri A. GOVINDASAMY : ஸார், இன்றையதினம், முக்கியமான மொழிப் பிரச்சினை விவாதிக்க இருக்கும்போது, முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்துக் கொண்டிருக்கிறார்களே, அது சரியா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மொழிப்பிரச்னை பற்றி யார் பேசப்போகிறார்களோ, அந்த அமைச்சர் இங்கே இருக்கிறார்கள். நான் பேசப்போவதால், நான் இருக்கிறேன். முதல் அமைச்சர் பேசப் போவதில்லை. ஆகவே, ஒன்றும் தவறில்லை.

Sri P. U. SHUNMUGAM : சுற்றுப் பிரயாணம் போகும்போது, அமைச்சரவர்கள் பொதுக் கூட்டங்களில் கலந்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

Mr. SPEAKER : பொதுக் கூட்டம் இல்லை.

Sri P. U. SHUNMUGAM : கட்சிக் காரியங்களும் செய்வதாகச் சொன்னார்கள். கடைசியில் பொதுக் கூட்டங்களில் கூட கலந்துகொண்டு,

[5th September 1960

மற்ற அரசியல் கட்சிகளைத் தாக்குவது முறையா ? பொதுக் கூட்டங்களில் கலந்துக் கொண்டு மற்ற கட்சிகளை தாக்குவதற்குப் பிரயாணப் படி வாங்குவதாக இருப்பதால், அப்படிச் செய்வது முறையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது சர்க்கார் சில கொள்கைகளை நிறைவேற்ற முயற்சிக்கிறது. அப்படி கொள்கைகளை நிறைவேற்ற, பொது மக்கள் ஆதரவு வேண்டியிருக்கிறது. அப்பொழுதுதான் அவற்றை நிறைவேற்ற முடியும். அப்படி சர்க்கார் கொள்கைகளுக்கு எதிராகப் பிரசாரம் நடந்தால், எங்கள் கொள்கைகளை எடுத்து மக்களுக்குச் சொல்லி, எதிரி வாதங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியது மந்திரிகளின் பொறுப்பு. அப்படிச் செய்யாவிட்டால், சர்க்கார் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றியதாகாது.

SRI A. MARIAPPAN : இப்பொழுது எஸ்டிமேட் கமிட்டி போன்ற கமிட்டிகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, அங்கத்தினர்கள் கட்சிக் கூட்டங்களுக்கும் போகிறார்களே, அந்த சமயத்தில் படி வாங்குகிறார்களே, அது சரியா ?

MR. SPEAKER : The question is out of order.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சர்க்கார் படியில் போய், வெளியில் மற்றக் காரியங்களில் கலந்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது, முதல் அமைச்சர் அவர்கள் காலையில் பொதுக்காரியத்தில் ஈடுபட்டு, பிறகு காங்கிரஸ் கட்சிக் கூட்டமும், ரகசியமாக ஊழியர்கள் கூட்டமும் கூட்டிப் பேசுகிறார்களே, அது சரியா ?

MR. SPEAKER : போகவில்லை என்று சொல்ல வில்லையே.

THE HON. SRI C. SUBRAMANIAM : I will again read for the benefit of the hon. Member. If party work is combined with official tours, no travelling allowance is claimed for the journey and halt involved in such party work.

Electric pump-sets

* 438—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதுரை ஜில்லாவில் 1,725 மின்சார பம்பு செட்டுகள் "ஹையர் பர்ச்சேஸ்" திட்டத்தில் கொடுப்பதாக திட்டமிட்டபடி கொடுக்கப்பட்டதா ?

(ஆ) இவை எந்தெந்த பிளாக்கில் எத்தனை கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The information is being collected and will be placed on the table of the House.

Assignment of lands to the poor

* 439 Q.—SRI. S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்டு இலாகாவுக்குச் சொந்தமான நிலங்கள் காடுகளுக்குத் தகுதியற்றதென்று நிலமில்லா ஏழைகளுக்கு மாவட்டங்கள் வாரியாக எவ்வளவு நிலம் பட்டா செய்யப்பட்டது ?

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர் தாலூகாவில் எவ்வளவு நிலம் பட்டா செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are no lands under forests, which are not fit to be maintained as forests. In the past two years, an extent of 20 acres only in Suryamalai